முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி மார்கழி மாதம் 15ம் திகதி முதல் மார்கழி மாதம் 22ம் திகதி வரை**

**டிசம்பர் 30ம் திகதி முதல் ஜனவரி 6ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **மறை போற்றும் மரபுகளும்**
**மாண்புகளும் மிகுந்த பாரதமே**
**குறைவிலா இறை பலமும்**
**கோட்டங்கள் வழிபாடு தருமங்கள்**

**2.** **தருமங்கள் தயவுகளும் மிகுந்த**
**தன்னார்வ தொண்டுமிக்க தமிழகமே**
**வருங்கால பலனாக இந்தியா தமிழகத்தில்**
**விளம்பி சிலை திங்கள் தன்னில்**

**3.** **தன்னிலே மூவை திகதி மேல் இருபானீர் திகதிவரை**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 15ம் நாள் 30.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 22ம் நாள் 06.01.2019, ஞாயிறு முடிய)**
**தக்க நிகழ்வாக சுப்பிரமணியர் யானும்**
**அண்ணல் ஆறுமுக அரங்கன் கேட்க**
**ஆசிதனை இனிதே விளம்பிடுவேன்**

**4.** **விளம்பிட தமிழக மக்களிடம்**
**விதைத்த அரச திட்டங்கள்**
**கலங்கமற பூர்த்திபடா வண்ணம்**
**கழனி பூமி காக்கப்படா வண்ணம்**

**5.** **வண்ணமுடன் எந்தவித மாற்றமும்**
**வளர்ச்சியும் காணா தடைபடும்**
**மண்ணுலகில் கூடியுள்ள வரிச்சுமை**
**மன்னனை மக்களை வீழ்த்த நேரும்**

**6.** **நேருமைபட மக்களை நோக்கிய**
**நிர்வாகம் நீதி காக்கப்படவே**
**தருமப்படி ஆளுமை பெருகவே**
**தமிழகம் வளரும் தலைநிமிரும்**

**7.** **தலைமை கொண்ட பாரதமும்**
**தக்க மாநில உரிமைகட்கு**
**பிழைநேரா தயவுகாட்டி ஆளவே**
**பேராதரவு பெருகி நடுவண் அரசும்**

**8.** **அரசும் பலமும் பாதுகாப்பும்பட**
**ஆளுமையில் சுடர்விட நேரும்**
**தரணியில் வருவாய் கூட்டுகின்ற**
**தக்க துறைகள் பல இருக்க**

9. இருக்கவே நிலைகளை மறந்து
ஏழைகள் மேலும் வாழ்வாதாரம் மேலும்
வருத்தமுற வரிச்சுமை கூட்டினால்
வலுவிழந்து வளமிழந்து பாரதம்

10. பாரதமும் பின்னடைவு கொள்ள நேரும்
பரிபக்குவமும் தயவும் பெருகும்படி
ஆறுமுகன் என் சக்திமிகு அரங்கன்
அருளுரை ஆசி தந்து வழிநடத்தும்

11. வழிநடத்தும் ஞான வழிமுறைக்கு
வந்துமே ஆளுமை புரிபவர்கள்
அழியாமை ஞான உபதேசமடைந்து
அறநெறிபட ஆளுமை கண்டிட

12. கண்டிட இந்தியா தமிழகம்
கண்ணியமுற எல்லா துறைகளிலும்
மீண்டிடும் நல்வளர்ச்சி பெற்று
முதன்மை நிலை கொண்டிட நேரும்

13. நேருமைபட மக்களை காக்கும் மன்னனே
நீதிமான் எந்தனுக்கு சமமாவான்
ஆறுமுகன் அருளாசிக்கு உரியவனாவான்
அறிவித்த வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் மார்கழி மாதம் 15ம் நாள் 30.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 22ம் நாள் 06.01.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

வேதங்கள் எல்லாம் போற்றும் வகையில் மேன்மைமிக்க மரபுகளையும் மாண்புகளையும் அதிகமாக கொண்டிட்ட பாரததேசத்திலும் குறையற்ற இறைபலமும் ஆலய வழிபாட்டு தலங்களும் தருமசாலைகளும் தயவும் அதிகமாக உள்ள தன்னார்வ தொண்டுள்ளம் மிகுந்த தமிழகத்திலும் விளம்பி வருடம் மார்கழி மாதம் 15ம் நாள் 30.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 22ம் நாள் 06.01.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

தமிழக மக்களுக்காக அரசு போட்ட திட்டங்கள் எல்லாம் பூர்த்தியாகாமல் இருக்கும், விவசாய மக்களின் விளைநிலங்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவும், எந்த மாற்றமும் வளர்ச்சியும் காணப்படாது தடைபடும். நாட்டினில் போடப்பட்டுள்ள வரிச்சுமையினால் அரசுக்கும் மக்களுக்கும் பெரும் துன்பங்களை தரும்.

நேர்மையுடனும் நீதியுடனும் அரசு நிர்வாகம் நடத்தினால் நீதி காக்கப்பட்டால் தருமத்தின் வழியில் ஆட்சி நடந்திட்டால் தமிழகம் வளரும் தலைநிமிரும்.

இந்தியாவை ஆட்சி புரிகின்ற மத்திய அரசு மாநில அரசுகளின் உரிமைகளுக்கு பாதகம் ஏற்படாமல் நடந்து மாநில அரசுகளிடம் தயவு காட்டி ஆட்சி செய்திட்டால் மாநில அரசுகளின் ஆதரவு பெருகி மத்திய அரசும் பலமும் பாதுகாப்பும்மிக்க அரசாக மாறிடும்.

**உலகினில் அரசின் வருவாயை பெருக்குவதற்கு தேவையான துறைகள் பல இருக்கின்றன. அதைவிடுத்து அரசு தனது நிலைப்பாட்டை மறந்து ஏழைகள் மேலும் மக்களின் வாழ்வாதாரத்தின் மீதும் மக்கள் வருந்தும்படியாக வரிச்சுமைகளை அதிகப்படுத்தினால் ஆட்சி வலுவிழந்து, வளம் இழந்து போவதோடு நாடும் பின்னடைவினை சந்திக்கும்.**

**தயவும், பரிபக்குவமும் பெருகும்படி மக்களுக்கு ஆசி தந்து அருள் உபதேசம் செய்கின்ற மகா ஞானி முருகப்பெருமான் எனது அவதாரமாக உள்ள அரங்கமகாதேசிகனாரின் அருளுரையை ஏற்க, அரங்கனின் அருளுரைகள் மூலம் ஆசி தந்து வழிநடத்துகின்ற அரங்கனின் ஞானவழிமுறைக்கு உலகோர் வருகை தந்து கடைப்பிடிப்பதோடு ஆட்சி புரிபவர்கள் எல்லாம் அரங்கனிடத்து அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு உபதேசத்தினை அடைந்து கடைப்பிடிக்கப்படுவதுடன் அறநெறிப்படி நடந்து ஆட்சி செய்திட்டால் இந்தியாவும், தமிழகமும் கண்ணியம் மிகுந்து எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்து மீண்டும் அனைத்து துறைகளிலும் இந்தியா வளர்ச்சி பெற்று உலகினில் முதன்மையான நிலைக்கு வந்திடுமப்பா.**

**நேர்மையுடன் மக்களைக் காக்கின்ற மன்னனே நீதிமான் எந்தனுக்கு சமமாவான், ஆறுமுகப்பெருமான் எனது அருளாசிக்கு உரியவனாவான் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.**

–சுபம்–